மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்முனைவோர் முன்வந்தால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10.50

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சிட்கோ மூலம் சிறப்பான நிதி ஒதுக்கி 53 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கிண்டியில் ஒரு தொழில்பேட்டையை நிறுவி, அதிலும் பெண்களுக்கு என்றே மின்னணு தொழில்பேட்டைகள் எல்லாம் வழங்கி இருக்கிறார்கள். பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து சென்னை, பம்பாய் போன்ற இடங்களுக்கு சென்று மின்னணு தொழிலில் சிறப்பாக செயலாற்றி வருகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற எண்ணத்தின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தில் மின்னணு தொழில்பேட்டையை துவங்குவதற்கு—பெண்களுக்கு என்று தனியாக தொடங்குவதற்கு—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து திட்டத்தை செயல்படுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே தொழில்முனைவர்கள் முன்வந்ததன் காரணமாக அந்தத் தொழில்பேட்டையை நாம் சிட்கோ மூலமாக உருவாக்கிக் கொடுத்திருக்கின்றோம். அதேபோன்று இராமநாதபுரம் மாவட்டத்திலும் தொழில்முனைவதற்கு முன்வருவார்களேயானால் அதைப்பற்றி அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

112—

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் சாலையைச் செப்பனிடுதல்

*** 36587**—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், திருசூர்-போளூர் (வழி) அல்லி நகர் சாலையை வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செப்பனிடப்படும்?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே அடுத்த வினாவிற்கு பதில் இல்லை.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருசூர்-போளூர் (வழி) அல்லிநகர் சாலை என்பது ஏறத்தாழ 5 கிலோமீட்டர் தூரம் கொண்ட சாலை. ஆனால் எங்களுடைய போளூரைப் பொறுத்தவரையில் ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ 60 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே 2½ லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்து ஆண்டுதோறும் வேலூர் சர்க்கரை ஆலை—இதன் மூலம் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது— அதிலே செஸ் பணமாக, சேமிப்புப் பணமாக ஆண்டுதோறும் ஏறத்தாழ 132 லட்சம் ரூபாய் இருப்பதாக நான் அறிகிறேன். தயவுசெய்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக பல முறை மனுக்கள் குழுவிலும் இந்த சாலையை சீர் செய்ய வேண்டுமென்று மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். இதனால் மாம்பட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தா. வேடியப்பன்: ஏலபிறை, திருசூர், எழுவாம்பாடி போன்ற ஏறத்தாழ 10 ஆயிரம் விவசாயிகள் பயனடையக்கூடிய சாலை, தயவுசெய்து, கருணைகூர்ந்து வேலூர் சர்க்கரை ஆலை மூலமாக இந்தச் சாலையை செஸ் பணத்திலிருந்து மீண்டும் செப்பனிடுவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் வட்டம், அல்லிநகர் சாலை வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை பகுதியில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கக்கூடிய இந்தச் சாலையினுடைய நீளம் 6 கிலோமீட்டர். இந்தச் சாலையை அமைக்கின்ற நேரத்திலே மஞ்சள் ஆற்று நீர் வரக்கூடிய கால்வாயில் ஒரு பாலம் கட்ட வேண்டியிருக்கிறது. எனவே, இதை எல்லாம் சேர்த்து பொறியாளர்கள் ஆய்வு செய்த நேரத்திலே 74 லட்சம் ரூபாய் தேவை என அறிக்கை தந்திருக்கிறார்கள். எனவே, இந்தத் தொகை அந்த ஆலையிலே இருக்கக்கூடிய நிதியாக இல்லாத காரணத்தினால் தற்சமயம் இது சாத்தியக்கூறு இல்லை. வருங்காலத்திலே பரிசீலிக்கப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சாலை தற்போது பி.ஏ.வி. ஓர்க்கிலே ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் அளவிலே புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியிலே தற்போது ஜல்லி சாலையாக போடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். மேலும் இந்தச் சாலையை சீர் செய்வதால் அப்பகுதி வேளாண்மை மக்களுடைய குறையை நிவர்த்தி செய்ய முடியும். ஆகவே, பரிசீலனை செய்யும் என்று சொன்னதை, தயவுசெய்து நல்ல தார்ச்சாலையாக அமைத்து, அப்பகுதி வேளாண்மை மக்களுடைய கோரிக்கையை வரும் ஆண்டிலே செய்து கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகுதான் இன்றைக்கு கரும்பு பயிரிடக்கூடிய பரப்பு உயர்ந்திருக்கிறது. 1990-ஆம் ஆண்டு தமிழகத்திலே 2 லட்சம் எக்டேரிலே கரும்பு பயிரிடப்பட்டது. அன்றைக்கு ஒரு டன் கரும்புக்கு 250 ரூபாய் வழங்கப்பட்டது. இன்றைக்கு 3 ஆண்டுகளுக்கு பிறகு புரட்சித் தலைவி அவர்கள் ஒரு டன் கரும்புக்கு, அதாவது 8.5 சதவிகித சர்க்கரை சத்து கொண்ட கரும்புக்கு 525 ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். எனவே, 2 லட்சம் எக்டேரிலே பயிரிடப்பட்ட கரும்பு என்பது இன்றைக்கு 3 லட்சம் எக்டேரிலே பயிரிடப்பட்டிருக்கிறது. எனவே, அதிகமாக கரும்பு பயிரிடப்படுகின்ற நேரத்திலே அதிக வருவாய் கரும்பு ஆலைகளுக்கு வரக்கூடிய நேரத்திலே இந்த செஸ்சும் உயர்கிறது. எனவே, இந்த ஆண்டு அந்த நிதி உயர்கின்றபொழுது இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர்.

113—

பிறமாநில வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் விதித்தல்

* **20594**—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நுழையும் பிற மாநிலங்களைச் சேர்ந்த வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் விதிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?